<u>பத்திரிகை செய்தி</u>

சமுகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் வேலூர் மாவட்டத்தில், மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் ஒன்றிய அரசின் திட்டங்கள் திறன்பட செயல்படுவதையும் திட்டங்களுக்கான பயனாளிகள் (ம) திட்டப்பலன்கள் கண்காணிக்கவும் மத்திய மாநில திட்டங்கள் பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பெண்களின் ஒருங்கிணைப்பு மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் காலிப்பணியிடமாக உள்ள ஒரு (1) தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கு, தகுதியுள்ள நபர்கள் தன்விவர குறிப்பு மற்றும் சான்று நகல்களுடன் வரும் ________ -க்குள் கீழ்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கலாம் என வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

<u>தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கான தகுதிகள்:-</u>

1. விணணப்பதாரர் 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2. கல்வித் தகுதி- பட்டப் படிப்பு (Graduation) முடித்தவர்களாக இருக்க வேண்டும்.

3. தொகுப்பூதியம்:- மாதம் ரு.20,000/-

4. கணினி மற்றும் தகவல் தொழில் நுட்பத்தில் மூன்று வருட பணி அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்(தரவு மேலாண்மை (Data Management), செயல்முறை ஆவணப்படுத்துதல்(Process Documenttation),இணையதள அடிப்படையிலான அறிக்கைகள் தயார் செய்தல்.

5. மாநில அல்லது மாவட்ட அளவிலான அரசு அல்லது அரசு அல்லது அரசு சாரா நிறுவனங்கள்/ தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும்.

6. தமிழ் (ம) ஆங்கிலம் தட்டச்சு தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

-->/2/

விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்ப படிவத்தினை வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் இணையதள முகவரியில் (www.vellore.nic.in) பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 14.8.2025 அன்று மாலை 5.00 மணிக்குள் வேலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் அமைந்துள்ள மாவட்ட சமூகநல அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படாது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-**

மாவட்ட சமூகநல அலுவலர்,
மாவட்ட சமூகநல அலுவலகம்,
பி-பிளாக், 4-வது தளம்,
மாவட்ட ஆட்சியரகம்,
சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம் -9.